# இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை

## வாய்ப்பு விளம்பரம்

**உணவுவிடுதிப் பணியாள்/அறைப் பணியாள் (தேசிய ஓய்வு விடுதி - பதவி வெற்றிடங்கள் 03)**

**பதவிக்குரிய அலுவலகக் கடமைகள்**

- வருகை தரும் விருந்துநர்களை விநயமாக உபசரித்து தரமான நுகர்வோர் சேவையை வழங்க உதவுதல்.
- அறை வசதிகளையும் உணவு மற்றும் பானங்களையும் பெறுவதற்கு ஓய்வு விடுதிகளுக்கு வருகின்ற விருந்திநர்களுக்கு தேவையான உணவுக் கட்டளைகளைப் பெற்று சமையலறைக்கு ஒப்படைத்து அதற்கு ஏற்ப உணவு பானங்களைத் தயாரித்த பின்னர் அவர்களை உணவகத்திற்கு அழைத்துச்செல்லல்.
- உணவகத்தையும், மேசைகளையும், கதிரைகளையும் மற்றும் மேசை விரிப்புகள் அனைத்தையும் துப்புரவு செய்தல் மற்றும் பீங்கான்களையும், கோப்பைகளையும், கண்ணாடிப்பாத்திரங்களையும், ஏனைய எல்லா பொருட்களையும் கழுவிச்சுத்தம் செய்தல்.
- ஓய்வு விடுதிகளில் விருந்திநர்களுக்கு தங்குவதற்காக வழங்கப்படும் அறைகளையும், குளியலறைகளையும் சத்தம் செய்து உரிய முறையில் ஒழுங்குபடுத்தித் தயாராக வைத்தல்.
- பிரிவுத் தலைவரும்/அல்லது நிறுவன தலைவரும் பணிக்கும் ஏனைய அலுவலப் பணிகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வீடு பராமரிப்பு தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் பெற்ற அனுபவமும் சான்றிதழும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

**வயதெல்லை**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்**

*PL 1 **ரூ**. 24,750/- 10 x **ரூ**.250/- 10 x **ரூ**.270/- 7 x **ரூ**.300/- 15 x **ரூ**.330/- **ரூ**.37,000/-*

**ஆரம்ப சம்பளப் படிநிலை**

ரூ. 24,750/- + வாழ்க்கைப்படிச்செலவுக்குக் கொடுப்பனவு + விஷேட கொடுப்பனவு

**நன்மைகள்**

- ஊழியரையும் அவரின் குடும்ப அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய கவர்ச்சியான ஒரு மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி வாய்ப்புகள்
- போக்குவரத்துக் கொடுப்பனவு

***குறிப்பு***

***தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுராதபுர, கதிர்காமம், பண்டாரவளை மற்றும் நுவரெலியா இடங்களில் அமைந்துள்ள எந்த ஒரு தேசிய ஓய்வு விடுதியிலும் பணியாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.***

அக்கறையுடைய குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்கள் https://www.sltda.gov.lk/en/careers என்ற எமது இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் தொழிலுக்குப் பொருத்தம் என நினைத்தால் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி உறவினர்கள் அல்லாத இரண்டு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, உங்களின் சுய தகவல் அறிக்கையையும் (CV), கல்வி/தொழில் தகைமை சான்றிதழ்களின் பிரதிகளுடனும், சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்களின் பிரதிகளுடனும் பதிவுத் தபாலில் தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு **13.12.2024** ஆம் திகதிற்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல்மூலயில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்களில் / அரச கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்தத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**
**இலக்கம் 80**, **காலி வீதி**,
**கொழும்பு 03**